Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, AUGUST 12 2025

செவ்வாய்க்கிழமை 12, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 026 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE







வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் அடாவடியை கண்டிக்கும்

# வெள்ளி ஹர்த்தாலுக்கு ஜீவன், மனோ ஆதரவு

## முத்தையன்கட்டு இளைஞன் மரணம் குறித்து ஜனாதிபதிக்கு சுமந்திரன் கடிதம்

**5 ஆண்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்**

**சில இராணுவ வீரர்கள் கைது**

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அதிகப்படியான பிரசன்னத்தை உடனடியாக தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் .அத்துடன் முத்தையன்கட்டு இளைஞன் மரணம் தொடர்பில் நீதிக்கான செயல்முறை தலையீடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞன் மரணித்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் மற்றும் அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அவசர கடிதம் ஒன்றை ஞாயிற்றுக்கிழமை(10) அனுப்பிவைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

RTI தலைவராக

## தயா லங்காபுர நியமனம்

இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணையத்தின் தலைவராக மூத்த பத்திரிகையாளர் தயா லங்காபுர ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1965ஆம் ஆண்டு அத்தா பத்திரிகை மூலம் பத்திரிகையாளராக பத்திரிகைத் துறையில் நுழைந்த தயா லங்காபுர, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆவார்.

அவர் சிலுமின, திவயின, தினமின, ரிவிர மற்றும் லக்பிம உள்ளிட்ட பல செய்தித்தாள்களில் பணியாற்றியுள்ளார், மேலும் நீதிமன்ற அறிக்கையிடலில் விரிவான அனுபவமுள்ள ஒரு பத்திரிகையாளர் ஆவார்.

அவர் நீண்டகால பாராளுமன்ற நிருபராகவும் பணியாற்றியுள்ளார்.




## 499 முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து?

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 499 பேர் விரைவில் ஓய்வூதியத்தை இழப்பார்கள் என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ஒழிக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் குறித்த 499 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக ஓய்வூதியத்தை இழப்பார்கள்.

தொடர்ச்சி P2




## 40 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 40 விண்ணப்பங்கள் நிராகரிக்க ப்பட்டுள்ளன. தமக்கு கிடைக்கப்பெற்ற 77 விண்ணப்பங்களில் சுமார் 40 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அடிப்படை அளவுகோல்களை பூர்த்தி செய்யாததால் குறித்த 40 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# “குற்ற அலை இல்லை”

சிலர் சித்திரிக்க முயற்சிப்பது போல நாட்டில் ‘குற்ற அலை’ இல்லை என்று பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் திங்கட்கிழமை (11) அன்று குற்றவிசாரணை பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் இடம்பெற்ற



குற்றவியல் கும்பல்களுக்கு சில அரசியல்வாதிகளின் ஆதரவு இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி அனுரவுக்கு ITAK இன் அவசர கடிதம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அதிகப்படியான பிரசன்னத்தை உடனடியாக தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன், முத்தையன்கட்டு இளைஞன் மரணம் தொடர்பில் நீதிக்கான செயல்முறை தலையீடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சி

இலங்கை தமிழரசு கட்சி
Ilangai Tamilarasu Katchi

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தொடர்ச்சி P2



## முன்னேஸ்வரம் ஆலய வருடாந்த கொடியேற்றம்

வரலாற்று சிறப்பு வாய்ந்த சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத ஸ்ரீ முன்னை நாதர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் கொடியேற்ற நிகழ்வு திங்கட்கிழமை (11) அன்று இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் விவகாரம்:

## பொலிஸார் விளக்கம்

இராணுவ முகாமுக்குள் நுழைந்து திருட்டுச் சம்பவத்தை மேற்கொள்வதற்காக வந்த குழு மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இத்திருட்டுக்கு உதவிய மேலும் இரண்டு சிப்பாய்களும் ஒட்டுச்சுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

அரச காணி அபகரிப்பு:

## நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு

வவுனியாவில் பல்கலைக்கழகத்திற்கு அருகே 4 ஏக்கர் அரச காணி தனியாரினால் அபகரிக்கப்பட்ட நிலையில், அக்காணியினை கையப்படுத்தி பிரதேச செயலகத்திற்கு வழங்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நம்பிக்கையில்லா பிரேரணை இன்று ஒப்படைப்பு



பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் ஒப்படைக்க ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று செவ்வாய்க்கிழமை (12) சமர்ப்பிக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

உதவித்தொகை பெற்ற

## அமைச்சர்களின் வாரிசுகளுக்கு சிவப்பு அறிவித்தல்

ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவித்தொகை பெற்ற அமைச்சர்களின் மகன், மகள் மற்றும் உறவினர்களுக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வறிய நிலையில் உள்ள மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஜனாதிபதி நிதியத்திலிருந்து வெளிநாட்டு உதவித்தொகை பெற்றதாகக் கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும்

தொடர்ச்சி P2

அதிக விலைக்கு வாகன விற்பனை

## 3ஆவது இடத்தில் இலங்கை

உலக வங்கி தரவுகளின்படி, வாகனம் வாங்குவதற்கு உலகில் மிகவும் விலையுயர்ந்த சந்தைகளைக் கொண்ட நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருப்பதாக அட்வகேடா நிறுவனம் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை இட்டு திங்கட்கிழமை (11) அன்று தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டு வாகன விலைகளின்படி, இலங்கையில் ஒரு வாகனத்தின் விலை உலகளாவிய சராசரி விலையை விட 1.75 மடங்கு அதிகமாக உள்ளது என்றும், நாட்டின் வாகன விலைகள் சிங்கப்பூர் மற்றும்



மாலைத்தீவுக்கு அடுத்த இடத்தில் உள்ளன என்றும் அந்தப் பதிவில் கூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஊடகவியலாளர் வேடத்தில்

## ‘ஹரக் கட்டா’வை கொல்ல சதி?

ஹரக் கட்டா என்று அழைக்கப்படும் பாதாள உலகக் குழு உறுப்பினரை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்போது, பாதாள உலகக்குழுவை சேர்ந்த நபர் ஒருவரை ஊடகவியலாளர் போன்ற வேடத்தில் பயன்படுத்தி, கொலை செய்ய கெஹல்பத்தர பத்மே தலைமையிலான பாதாள உலகக் கும்பல் சதித்திட்டம் தீட்டியுள்ளதாக, பேலியகொடை குற்றப்பிரிவு நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. கெஹல்பத்தர பத்மேவின் பாதாள உலகக் கும்பலின் உறுப்பினர் என்று கூறப்படும் ‘கம்பஹா பஸ் தேவா’என்று அழைக்கப்படும் நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக கூறப்படுகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வெள்ளி ஹர்த்தாலுக்கு ஜீவன், மனோ ஆதரவு

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவு முத்தையன்கட்டு குளத்தில் சனிக்கிழமை காலை எதிரிமன்சிங்கம் கபில்ராஜ் என்பவரின் உடல் மீட்கப்பட்டமை தொடர்பில் உங்கள் கவனத்துக்கு அறிவுறுத்துகிறோம்.

2025.08.07ஆம் திகதியன்று இலங்கை இராணுவத்தின் 63ஆவது பிரிவு முகாமுக்கு 5 ஆண்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் இராணுவத்தால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இவர்களில் கபில்ராஜ் என்பவர் காணாமல் போயுள்ளார். பின்னர் அவரது உடல் முத்தையன்கட்டு குளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சில இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.தடையற்ற வகையில் முழுமையான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்துவது மட்டுமல்லாமல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அடக்குமுறையான நடத்தை மற்றும் அதிகப்படியான பிரசன்னத்தையும் உங்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அதிகப்படியான பிரசன்னத்தை உடனடியாக தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், இந்த சம்பவத்தில் நீதிக்கான செயல்முறை தலையீடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யுமாறும் உங்களிடம் வலியுறுத்துகின்றோம்.

இன்றுவரை தொடரும் இராணுவத்தினரின் கொடூர செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழு ஹர்த்தாலில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளோம்.

ஜீவன் தொண்டமான் முழுமையான ஆதரவு:

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தவருக்காக வடக்கு மற்றும் கிழக்கில் 2025 ஆகஸ்ட் 15ம் திகதி, வெள்ளிக்கிழமை அனுசரிக்கப்படவுள்ள 'ஹர்த்தால்' போராட்டத்திற்கு ஒரு இலங்கையராகவும், மலையக தமிழராகவும், எனது முழுமையான ஆதரவினை வழங்குவதாக தெரிவித்துக்கொள்கின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

கடந்த 7 ஆம் திகதியன்று, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டுப் பகுதியில் 32 வயதான எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்ற இளம் குடும்பஸ்தர், இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல்போனதாக தேடப்பட்டு வந்தார். பின்னர் கடந்த சனிக்கிழமை (09) அன்று, அவரது சடலம் முத்துஐயன்கட்டுக் குளத்திலிருந்து மீட்கப்பட்டது.

நீதிக்கான கோரிக்கையிலும், இராணுவத்தின் அநீதியான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நடைபெறவுள்ள இந்த ஹர்த்தாலுக்கு, எனது ஒற்றுமையையும் உறுதியான ஆதரவையும் வெளிப்படுத்துகின்றேன்.

"யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்த பின்பும், இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் நிகழ்வது மிகவும் வருத்தமளிப்பதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது" எனவும் வலியுறுத்துகின்றேன்.

த.மு.கூ தலைவர் மனோ கணேசன்:

இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு இலங்கை தமிழரசு கட்சி, "நீதியான விசாரணை", "வடகிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து வெள்ளிக்கிழமை நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை தாம் ஆதரிக்கிறோம் என தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், மேலும் கூறி உள்ளதாவது,

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் அனுரகுமார திசாநாயக்க, இது தொடர்பில் உடன் விசாரணை, தண்டனைக்கு உரிய சட்ட நடவடிக்கை, ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன், இதை அடிப்படையாக கொண்டு, வடக்கு கிழக்கின் மேலதிக இராணுவ பிரசன்னத்தை உடன் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இராணுவ பிரசன்னம் குறைப்பு" என்பதுதான் இந்த ஹர்த்தால் சொல்ல போகும் செய்தி. போர் செய்த இராணுவம் சும்மா இருக்காது. அதிலும் இன அடிப்படையிலான போர் செய்த இராணுவ சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தங்கி இருக்கத்தான் செய்யும்.

எனவே, அவர்களை தென்னிலங்கைக்கு கொண்டு வந்து, "குளம் வெட்டுவது, குளத்தில் தூர் எடுப்பது, வீதி அமைப்பது, வீடு கட்டுவது, ஹோட்டல் நடத்துவது, தோட்டம் செய்வது, காய்கறி சந்தை நடத்துவது" போன்ற இன்ன பிற அபிவிருத்தி பணிகளில், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் அனுரகுமார திசாநாயக்க, ஈடுபடுத்த வேண்டும்.

மேலும், அரச இராணுவ பயங்கரவாதத்தை, நாம் அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்கிறோம். எப்போதும் எதிர்ப்போம்.

வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை முழு அடைப்பு நடை பெற அழைப்பு விடுத்து இருக்கும் இலங்கை தமிழரசு கட்சியின் கோரிக்கையை, தமிழ் முற்போக்கு கூட்டணி வரவேற்று, ஆதரவை அறிவிக்கின்றது என்றார்.

# 499 முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து?

இவ்வாறு ஓய்வூதியத்தை இழக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவில், மக்கள் விடுமுலை முன்னணியின் 30 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ஒழிக்கும் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு

2024ஆம் ஆண்டு இறுதியில் தனியாரினால் குறித்த அரச காணியினை அபகரிக்கப்பட்டமையுடன் தொடர்ச்சியாக ஏனைய தனிநபர்களினாலும் காணி தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டன.

இதனையடுத்து, இவ்வருடம் ஆரம்பத்தில் பிரதேச செயலகத்தினால் அரச காணியிலிருந்து வெளியேறுமாறு முதலாவது வெளியேற்றல் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

மேலும் அவ் வெளியேற்றல் கட்டளையினை ஏற்றுக் கொள்ளாமையினால் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டது. இவ் வழக்கினை பிரதேச செயலாளர் இந்திரராசா பிரதாபன் மற்றும் காணி உத்தியோகத்தர் வசந்தன் , காணிக்கிளை அதிகாரிகள் அரச காணிகளுக்கான ஆவணங்களை வழங்கி வழக்கினை வாதாடி வந்தனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் குறித்த அரச காணியிலுள்ளவர்களை வெளியேற்றி காணியினை பிரதேச செயலகத்திற்கு கையளிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

நீதிமன்ற பதிவாளரின் தலைமையில் தனியாரினால் ஆக்கிரமிக்கப்பட்ட இடத்திற்கு சென்ற கிராம சேவையாளர் நிலான் , குடியேற்ற உத்தியோகத்தர் பண்டார , நீதிமன்ற மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் சகிதம் சென்ற குழுவினர் அரச காணியிலுள்ளவர்களை வெளியேறுமாறு தெரிவித்தமையுடன் கட்டிடங்களை இடித்து காணியினை பிரதேச செயலக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறும் திங்கட்கிழமை (11) முதல் இக் காணி பிரதேச செயலக காணி என தெரிவித்து காணியிலிருந்து ஒரு பிடி மண்ணை நீதிமன்ற பதிவாளர் கையில் எடுத்து குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளர் ஆகியோரின் கையில் ஒப்படைத்தார்.

# நம்பிக்கையில்லா பிரேரணை இன்று ஒப்படைப்பு

முன்னதாக, நேற்றைய தினம் குறித்த பிரேரணை சமர்ப்பிக்கப்படவிருந்த போதிலும், சபாநாயகர் பாராளுமன்றத்தில் இல்லாததால் இன்றைய தினம் பிரேரணையை சமர்ப்பிக்க கட்சி முடிவு செய்ததாகவும் அவர் கூறினார்.

அருண ஜயசேகர பாதுகாப்பு பிரதியமைச்சராக பதவி வகிக்கும் அரசாங்கத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படுவதால், அழுத்தங்கள் மற்றும் அக்கறை முரண்பாடு ஏற்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதன் ஊடாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகள் பாரபட்சமின்றி மற்றும் சுதந்திரமாக நடைபெறுமா என்பதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பாதிக்கப்பட்டவர்கள், கத்தோலிக்க திருச்சபை மற்றும் பொதுமக்களின் நம்பிக்கை சிதைந்துள்ளதால், அவர்,குறித்த பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி கூறியுள்ளது.

இதற்காக பாராளுமன்றில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

# 3ஆவது இடத்தில் இலங்கை

தரவரிசையில் இலங்கை 175 புள்ளிகளைப் பெற்றுள்ள அதே நேரத்தில் மாலைத்தீவு 224.7 புள்ளிகளையும் சிங்கப்பூர் 355.8 புள்ளிகளையும் பெற்றுள்ளது.

அதிக வரி சதவீதங்கள் மற்றும் வாகன இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டுக் கொள்கைகள் காரணமாக, இலங்கையில் வாகனம் வைத்திருப்பது ஒரு சிலரால் மட்டுமே வாங்கக்கூடிய ஆடம்பர பொருளாக மாறியுள்ளது.

இந்த விடயம் நாட்டு மக்களின் உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார வாய்ப்புகளை மறைமுகமாக பாதிக்கிறது என்று அட்வகேட்டா மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பொலிஸார் விளக்கம்

இராணுவ முகாமிற்கு வருமாறு கூறிவிட்டு தாக்குதல் நடத்தியதில் நீரில் மூழ்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் ஊடக பிரிவினரால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

முத்தையன்கட்டுகுளம் இடதுகரை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் இராணுவ முகாமிற்கு வாருங்கள். தகரங்கள் கழற்ற வேண்டும் என குறித்த பகுதி இளைஞர் ஒருவருக்கு ஒரு தொலைபேசி இலக்கத்தில் இருந்து 07.08.2025 அன்று இரவு 7.30 மணியளவில் அழைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இராணுவ முகாமிற்கு இரவு ஐவர் சென்றுள்ளனர். இராணுவ முகாமிற்கு சென்ற இளைஞர்களுக்கு தடிகள், கம்பிகளால் இராணுவத்தினர் துரத்தி துரத்தி குறித்த இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக உள்ள குளம் வரை தாக்கியுள்ளனர். அதனால் என்ன செய்வதென்று தெரியாது. இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக ஓடி தப்பி வந்ததாகவும் 20இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் தாக்கியதாக தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞன் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இராணுவ முகாமிற்கு சென்ற ஐந்து நபர்களில் நால்வர் திரும்பி வந்துள்ள நிலையில், ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவரின் இறப்பு தொடர்பில் பல சந்தேகங்கள் இருக்கும் நிலையில் குறித்த குடும்பஸ்தரின் இறப்பு தொடர்பில் பொலிஸ் ஊடக பிரிவினர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

07.08.2025ஆம் திகதின்று, முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சர் பிரிவிற்குட்பட்ட, ஒட்டுச்சுட்டான் பொலிஸ் நிலையத்தின் சிவநகரில் பிரதேசத்தில் அமைந்துள்ள 12ஆவது சிங்கப் படையணி முகாமை அப்புறப்படுத்துவதற்கு சில நாட்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது, 07.08.2025ஆம் திகதியன்று இரவு வேளையில் அகற்றப்பட்ட இரும்பு மற்றும் வெளிப்புறப் பொருட்களை எடுத்துச் செல்லதற்காக அதன் முகாம் வளாகத்தினுள் அனுமதியின்றி நுழைந்த 5 பேரை விரட்டியடிப்பதற்காக முகாமிலுள்ள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அதில் தப்பிச்செல்ல முயன்ற ஒருவர் முத்தையன்கட்டு குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய பொலிஸ் விஷேட குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி நபர்கள் முகாம் வளாகத்தினுள் நுழைந்தபோது, முகாமிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களைக் கண்டு விரட்டியடிக்க முற்பட்ட போது, இதன் விளைவாக, உள்ளே நுழைந்தவர்கள் தாக்கப்பட்டது தெரியவந்ததன் காரணமாக சிப்பாய் ஒருவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், முகாமுக்குள் நுழைந்து திருட்டுச் சம்பவத்தை மேற்கொள்வதற்காக இக் குழுவிற்கு உதவிய மேலும் இரண்டு சிப்பாய்களும் ஒட்டுச்சுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களை 09.08.2025 திகதியன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர், மூன்று சந்தேக நபர்களும் 19.08.2025ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

இறந்தவரின் உடலை பிரேதப் பரிசோதனை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சடலம் தொடர்பாக வெளிப்படையான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் எந்தவித செல்வாக்கும் இல்லாமல், வெளிப்படையாகவும், பாரபட்சமின்றியும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒட்டுச்சுட்டான் பொலிசார் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரும் இணைந்து அப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

# அமைச்சர்களின் வாரிசுகளுக்கு சிவப்பு அறிவித்தல்

அரசியல்வாதிகளின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு விரைவில் சிவப்பு அறிவிப்பு அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்கு வழங்கப்பட்ட குறித்த பணத்தை அவர்களிடம் இருந்து அறவிடுவது தொடர்பாக அரசாங்கம் ஏற்கெனவே அரச சட்டப் பிரிவு அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தியுள்ளது.

இதற்கமைய, ஜனாதிபதி நிதியச் சட்டத்தின் விதிகளின்படி ஜனாதிபதி நிதியிலிருந்து வெளிநாட்டு உதவித்தொகை பெறுவது சட்டவிரோதமானது என்று அரச சட்ட பிரிவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஏழைகளுக்கு சுகாதார நிதியுதவி வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் குழுவின் 720க்கும் மேற்பட்ட பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு 200 மில்லின் ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ள வெளிநாட்டு உதவித்தொகைகளை வழங்கியுள்ளமை அண்மையில் தெரியவந்தது.

நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் டாக்டர் அனுர கருணாதிலக அண்மையில் பாராளுமன்றத்தில் இந்த விடயத்தை பகிரங்கப்படுத்தி இருந்தார். இந்த நிலையில், குறித்த பணத்தை மீளப்பெறுவதற்கான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# 'ஹரக் கட்டா'வை கொல்ல சதி?

அதன்படி, கடந்த வாரம் விசாரணைக்காக ஹரக் கட்டா நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோது, அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை இரட்டிப்பாக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இது தொடர்பாக தேவாவிடம் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் பல முக்கிய தகவல்கள் வெளியாகி வருவதாகவும் குற்றப்பிரிவு பொலிஸார் கூறியுள்ளனர்.

நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அறையில் பாதாள உலகத்தை சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ என்ற நபரை கொலை செய்ய கெஹல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சலிந்த ஆகியோரால் சட்டத்தரணியாக மாறுவேடமிட்ட பாதாள உலகக் கொலையாளி பயன்படுத்தப்பட்டார்.

'ஹரக் கட்டா' நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும் சந்தர்ப்பத்தில் அவரை ஊடகவியலாளர்களால் நெருங்க முடியும் என்பதாலும், ஊடகவியலாளர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதாலும், இந்தத் தாக்குதலுக்கு ஊடகவியலாளர் வேடமணிந்த ஒரு பாதாள உலகக் கொலையாளியைப் பயன்படுத்த இந்த பாதாள உலகத் தலைவர்கள் திட்டமிட்டிருந்ததாகத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட உதவி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, மேல் மாகாண வடக்கு பிரிவுக்கு பொறுப்பான உதவி பொலிஸ்மா அதிபர் நிஷாந்த சொய்சா, குற்றப்பிரிவு பணிப்பாளர் ரோஹன் ஒலுகல உள்ளிட்ட அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதி அனுரவுக்கு ITAK இன் அவசர கடிதம்

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞன் மரணித்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அவசர கடிதம் ஒன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவு முத்தையன்கட்டு குளத்தில் சனிக்கிழமை (09) காலை எதிரிமன்சிங்கம் கபில்ராஜ் என்பவரின் உடல் மீட்கப்பட்டமை தொடர்பில் உங்கள் கவனத்துக்கு அறிவுறுத்துகிறோம்.

2025.08.07ஆம் திகதியன்று இலங்கை இராணுவத்தின் 63ஆவது பிரிவு முகாமுக்கு 5 ஆண்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் இராணுவத்தால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இவர்களில் கபில்ராஜ் என்பவர் காணாமல் போயுள்ளார். பின்னர் அவரது உடல் முத்தையன்கட்டு குளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சில இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.தடையற்ற வகையில் முழுமையான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்துவது மட்டுமல்லாமல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அடக்குமுறையான நடத்தை மற்றும் அதிகப்படியான பிரசன்னத்தையும் உங்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அதிகப்படியான பிரசன்னத்தை உடனடியாக தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், இந்த சம்பவத்தில் நீதிக்கான செயல்முறை தலையீடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யுமாறும் உங்களிடம் வலியுறுத்துகின்றோம். இன்றுவரை தொடரும் இராணுவத்தினரின் கொடூர செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழு ஹர்த்தாலில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளோம் என்றுள்ளது.



## பிரபல பத்திரிகைக்கான விருதை வென்ற 'டெய்லி மிரர்', 'டெய்லி எஃப்டி' 'லங்கா தீப'

'லண்டன் வணிக ஆலோசனை நிறுவனம்' ஏற்பாடு செய்த உலக வணிக சிறப்பு விருது விழாவில் எமது சகோதர பத்திரிகைகளான 'டெய்லி மிரர்' 'இலங்கையின் மிக பிரபலமான ஆங்கில பத்திரிகைக்கான' விருதையும், 'லங்கா தீப' மிக பிரபலமான சிங்கள பத்திரிகைக்கான விருதையும், 'டெய்லி எஃப்டி' இலங்கையில் மிக பிரபலமான வணிக பத்திரிகை' விருதையும் வென்றன.

இந்த விருது விழா முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு, பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) அன்று நடைபெற்றது.

சிரேஷ்ட கட்டுரையாளர் மற்றும் பத்திரிகையாளருமான மோகன்ராஜ் மடவல, 'டெய்லி மிரர்' பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ஜமீலா ஹுசைன் மற்றும் 'டெய்லி எஃப்டி' பத்திரிகையின் துணை ஆசிரியர் சாருமினி டி சில்வா ஆகியோருக்கு குறித்த விருதுகளை வழங்கினார். விஜய பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர பிரிவு தலைவர் இந்திக ஜயமஹா மற்றும் இங்கிலாந்தில் உள்ள எல்பிசி குழு நிறுவனங்கள் மற்றும் கேடக் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மரி வதீர் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.



# 6,000 மெற்றிக்தொன் இரும்பு கழிவு மோசடி?

ரயில் திணைக்களத்தின் பாவனையில் இருந்து நீக்கப்பட்ட ரயில் பெட்டிகள் உள்ளிட்ட சுமார் 6,000 மெற்றிக்தொன் இரும்பு கழிவுகளை டெண்டர் செயல்முறைக்கு புறம்பாக இரண்டு பெரிய எஃகு நிறுவனங்களுக்கு விற்க தயாராகி வருவதாக, இலங்கை எஃகு கூட்டுத்தாபனத்தின் கொள்முதல் அதிகாரி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த இரும்பு கழிவுகளை விற்பனை செய்வதற்கான நடைமுறையின் போது, கொள்முதல் குழு அல்லது மதிப்பீட்டுக் குழு, முழுமையற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமல் பிழையான ஆவணங்களுடன் திணைக்களத்துக்கு நட்டம் ஏற்படும் வகையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த நிறுவனங்களுக்கு, குறைபாடுகள் உள்ள ஆவணங்களை சரிசெய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ரயில் திணைக்களத்துக்கு சொந்தமான கழிவு இரும்பை தனியாருக்கு விற்பனை செய்வதற்கான டென்டர் செயல்முறை கடந்த ஜூலை மாதம் பொது செய்தித்தாள் விளம்பரம் மூலம் தொடங்கப்பட்டதாகவும், டெண்டரை சமர்ப்பித்த நிறுவனங்கள் முன்வைத்த ஆவணங்கள் கடந்த மாதம் 23ஆம் திகதி திறக்கப்பட்டதாகவும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.



## 'International Tourism' கிரீடத்தை வென்ற இலங்கையின் ஆதித்யா

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 'மிஸ் டூரிசம் யுனிவர்ஸ் - 2025' போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய ஆதித்யா வெலிவத்த, 'Queen of the International Tourism' (சர்வதேச சுற்றுலாவின் ராணி) என்ற கிரீடத்தை வென்று திங்கட்கிழமை (11) அன்று இலங்கை வந்தார்.

உலகின் 17 நாடுகளைச் சேர்ந்த 17 பேர் பங்கேற்ற இந்தப் போட்டி, ஜூலை மாதம் 30 முதல் ஓகஸ்ட் 08 வரை பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் இடம்பெற்றது.

இந்த வெற்றியைத் தவிர, ஆதித்யா வெலிவத்த இந்தப் போட்டியில் சிறந்த தேசிய உடை மற்றும் மிக அழகான புகைப்படவியல் ஆகிய இரண்டு விருதுகளையும் வென்றுள்ளார்.

ஆதித்யா வெலிவத்த ஒரு பிரபலமான பாடகர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கடமையேற்பு

எஸ்.கீதபொன்கலன்



திருகோணமலை மாவட்டத்தின் 35ஆவது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக எல்.வை.ஏ.எஸ். அருண சந்திரபால திங்கட்கிழமை (11) அன்று கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

உற்த்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்ற பொலிஸ் அணிவகுப்பு மரியாதை அடுத்து அவர் பதவி பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அவர் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி இருந்த நிலையில் இவர் தற்போது திருகோணமலை மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

உதவி பொலிஸ் பரிசோதகராக திருகோணமலையில் தமது பொலிஸ் சேவையை ஆரம்பித்திருந்த இவர் அதன் பின்னர், பதவி உயர்வுகள் பலவற்றை பெற்ற நிலையில் தற்போது இம்மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ரயில் மோதி இளைஞன் பலி

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை(10) இரவு ரயில் தண்டவாளத்தில் அருகில் நின்று கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த இளைஞன் மீது ரயில் மோதியதில் உயிரிழந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஊறணி யைச் சேர்ந்த 23 வயதுடைய நாகேந்திரன் கரிகரராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்

சம்பவ தினமான இரவு குறித்த இளைஞன் தனது மனைவியுடன் ஏற்பட்ட சண்டையில் அடுத்து, தண்டவாளத்தில் நின்று தொலைபேசியின் பேசி கொண்டிருந்த நிலையில், மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த சடலத்தை மீட்டு ஏறாவூர் புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பானமேலதிக விசாரணைகளை ஏறாவூர் மற்றும் கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லொறி தீப்பிடித்தில் மூவர் வைத்தியசாலையில்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து வெளியேறும் குருந்துகஹஹெடெப்மா என்ற இடத்தில் திங்கட்கிழமை (11) அன்று லொறியொன்று கவிழ்ந்து தீப்பிடித்துள்ளதுடன், விபத்தின் போது, வாகனத்தில் இருந்த மூவர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து உலர் உணவு ஏற்றிச் சென்ற லொறி ஒன்றே இவ்வாறு நெடுஞ்சாலையில் இருந்து வெளியேறும் போது விபத்துக்குள்ளானது. இதில் காயமடைந்தவர்கள் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி கடற்கரைப் பகுதியில் ஆண் ஒருவர் மர்மமாக உயிரிழந்த நிலையில் திங்கட்கிழமை (11) பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செங்கலடி கணேச கிராமத்தைச் சேர்ந்த லக்கி என்றழைக்கப்படும் 34 வயதுடைய புத்திரசிகாமணி லக்ஷ்மன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஏறாவூர் பகுதியிலுள்ள உறவினரின் தங்க ஆபரண விற்பனை நிலையம் ஒன்றில் வேலை செய்து வந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (10) மாலை வீட்டை விட்டு வெளியேறி இரவாகியும் அவர் வீடு திரும்பாததால் உறவினர்கள் தேடி வந்துள்ளனர்.

இந்த நிலையில், சவுக்கடி கடற்கரை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இருப்பதாக பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த தடயவியல் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







## உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா-தீர்த்தம்

வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ சமுத்திர தீர்த்தோற்சவம் சனிக்கிழமை (9) அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே சுதா முன்னிலையில்

கடந்த 25ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகிய மகோற்சவம்

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற்று வந்தது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 15 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று சனிக்கிழமை (09) அன்று சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.







## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

டி.கே.ஜி.கபில

சுமார் 600,000 ரூபாய் பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற ஒருவர் திங்கட்கிழமை (11) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, கன்னேபானவில் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய அவர், துபாய் நாட்டில் வீட்டு வேலை செய்துள்ளதுடன் திங்கட்கிழமை (11) அதிகாலை ஓமானின் மஸ்கட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவரின் பயணப் பையில் இருந்து 'பிளாட்டினம்' மற்றும் 'மான்செஸ்டர்' வகையான 40,000 சிகரெட்டுகள் அடங்கிய 200 சிகரெட் அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# ஜனாதிபதியின் முக்கியத்துவம் வாய்ந்த எதிர்வரும் இரு விஜயங்கள்

இலங்கையின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, செப்டெம்பர் மாதம் ஜப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வழமை போன்று ஜனாதிபதி விறுவிறுவென விமான நிலையம் செல்வது, அந்நாட்டு ஜனாதிபதிகளுடன் புகைப்படமெடுத்துக் கொள்வது போன்றவற்றுடன் நின்றுவிடாமல், இலங்கை மக்களுக்கு ஆக்கபூர்வமான பலன்களை பெற்றுக் கொடுப்பதாக இந்த விஜயங்கள் அமைந்திருக்க வேண்டும்.

குறிப்பாக, அமெரிக்கா விஜயத்தின் போது, ஏற்கெனவே இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள வரி அறவீட்டை, மேலும் குறைத்துக் கொள்வது தொடர்பிலும், இலங்கையில் அமெரிக்காவின் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் தெளிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். உட்கட்டமைப்பு, உற்பத்தி அல்லது டிஜிட்டல் சேவைகள் என எந்தத் துறையாக இருந்தாலும், நேரடி முதலீடுகளினூடாக, இலங்கையில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதாக அமைந்திருக்க வேண்டும்.

இரு நாடுகளுமே தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்கரமான நாடுகள். தற்போதைய உலகும் AI, புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் ரொபோட்டிக்ஸ் என முன்னேற்றம் கண்டு வரும் நிலையில், இலங்கையின் இளம் தலைமுறையினருக்கும் இந்த பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய வசதி வாய்ப்புகள் கிட்ட வேண்டும். ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயங்களின் போது, இந்தத் துறை சார் முதலீடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எமது தேயிலை, வாசனைத்திரவியங்கள், ஆடை உற்பத்திகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்றவற்றை இந்த இரு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வது தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், குறைந்த வரி அறவீடுகள் மற்றும் அதிக சந்தை வாய்ப்புகள் போன்றவற்றினூடாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள உள்நாட்டு தொழிற்துறைகளை மீட்டு உயிர்பிக்கக்கூடியதாக இருக்கும்.

காலநிலை மாற்றம் தொடர்பிலும் இந்த விஜயங்களின் போது, ஜனாதிபதி திசாநாயக்க கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, ஜப்பானின் இடர் முன்னாயத்த நிலை நிபுணத்துவம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் காலநிலை முன்னறிவிப்பு தொழில்நுட்பம் போன்றவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் அதிகம் உள்ளன. எமது கரையோரங்களையும், சமூகங்களையும் பாதுகாப்பதற்கு கடன்களுக்கு பதிலாக மானிய உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டினுள் வரும் முதலீடுகள் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதாக அமைந்திருக்க வேண்டும். கொழும்பை மையமாகக் கொள்ளும் அபிவிருத்திப் பணிகளால், நாட்டின் ஏனைய பகுதிகள் முன்னேற்றமடைவதில் தாமதங்கள் ஏற்படலாம். எனவே, கிராமியப் பகுதிகளையும் மேம்படுத்துவதிலும், அப்பகுதிகளுக்கு அனுகூலங்கள் சென்றடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த விஜயங்களினூடாக கைகோர்ப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் எனும் செய்தி தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், எமது மக்களையும், எமது நாட்டின் இறையாண்மையையும் பாதுகாத்து மேம்படுத்தும் வகையில் இந்த பங்காண்மை அமைந்திருக்க வேண்டும். அதனை கவனத்தில் கொண்டு ஜனாதிபதி தமது உரையாடல்களை மேற்கொள்வார் என்பது ஒவ்வொரு இலங்கை குடிமகனினதும் எதிர்பார்ப்பாகும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

பொய் எதுவெனப் புரிய வேண்டும்; மெய் எது வெனத் தெளிதல் வேண்டும். இந்தக் கருத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், எப்படியோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழும் வழி எதுவெனச் சொல்லிக் கொடுப்பவர்கள் இன்றியே, நற்குணங்களுடன் வாழும் உத்தமர்களும் இருக்கிறார்கள். தங்களது பெற்றோர்களின் வழிப்படியே இத்தகையவர்கள், தங்களது வாழ்வைச் சீரோடும் சிறப்போடும் அமைத்துக் கொள்கிறார்கள்.

வீடுகள்கூட, தெய்வீகம் நிறைந்திருக்கும் கோவில்களாக அமைய வேண்டும். பெற்றோரின் நடத்தைகள் தூய்மையுடன் இருந்தால், எல்லா இல்லங்களிலும் அதிர்ஷ்டம், நிம்மதி, அறிவு, மேன்மை, ஞானம், பக்தி, பெரியோர் உறவுகள், அன்பு, ஈகை எல்லாமே கைகூடிவரும். எந்தக் கெட்டவர்களின் காற்றுக்கூட அங்கு உள்நுழைய முடியாது பாதுகாக்கப்படும்.

இப்படிப்பட்ட மேன்மைகளுடன் வாழ்ந்த பரம்பரைகளைக் கண்டிருக்கின்றோம். இல்லத்தின் சுற்றாடல்களில் புனிதம் பேணப்படல் வேண்டும். புறச் சுற்றம் அகச்சுற்றத்துக்கு வழிகோலும்.

காலையில் எழுந்து காலைக்கடன் முடித்தவுடன், தெய்வ வழிபாட்டுடன் அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதிகாலைப் பொழுதில் தெளிந்த மனோநிலையில் கற்ற கல்வி நிலைத்து நிற்கும். விளையாட்டு, பொழுதுபோக்கு, வீட்டுவேலை என அனைத்து நல்ல சீரிய பழக்கங்களையும் இளமையில் பழகி வழக்கங்கள் ஆக்கிக்கொள்ளுதல் எங்கேயும் எப்போதும் சிறப்பைத்தரும். நல்லகுடும்பங்களால் பூமி சிறக்கின்றது.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## நுரைச்சோலை சவூதி வீட்டுத் திட்டம்;

# எந்த அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும்?

**மொஹமட் பாதுஷா**

2004இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவூதி அரசாங்கத்தினால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு 13 வருடங்களாக இன்னும் பயனாளிகளுக்கு வழங்கப்படாதிருக்கின்ற நுரைச்சோலை வீட்டுத் திட்டம் பற்றிய கருத்துக்கள் மீண்டும் முன்வைக்கப்படுகின்றன.

இந்த வீட்டுத் திட்டத்திற்குப் பிறகு நிர்மாணிக்கப்பட்ட எத்தனையோ வீடமைப்புத் திட்டங்கள் பயனாளிகளுக்கு எந்தவித சிக்கலும் இல்லாமல் பகிர்ந்தளிக்கப்பட்டு விட்ட நிலையில், நுரைச்சோலை சவூதி வீட்டுத் திட்டம் மட்டும் இன்னும் காடாகிக் காட்சியளிக்கின்றது.

இப்படி ஆண்டுக்கொரு தடவை அதுபற்றி வாதப் பிரதிவாதங்களை முன்வைக்கப்படுகின்றதே தவிர ஆன பலன் ஒன்றுமில்லை.

இந்த விவகாரம் இனவாத நெருக்கடிக்குள் சிக்குண்டு பின்னர் நீதிமன்றம் சென்றது. உயர் நீதிமன்றம் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் வீடுகளைப் பகிர்ந்ததளிக்குமாறு தீர்ப்பளித்தது. ஆனால், இது நியாயமற்றது என முஸ்லிம்கள் தரப்பில் கூறப்பட்ட நிலையில், இதுவரை அவ்வீடுகள் யாருக்கும் கொடுக்கப்படவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பை நாம் கேள்விக்குட்படுத்த முடியாது. ஆயினும், அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, முற்றுமுழுதாக முஸ்லிம்கள் வாழும் அக்கரைப்பற்று பிரதேச செயலக எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை மாவட்ட இன விகிதாசரத்தின் படி, பகிர்ந்தளிப்பதே தார்மீகம் என்ற கருத்துக்கள் முஸ்லிம்களால் முன்வைக்கப்படுகின்றன.

இந்த 500 வீடுகளும் இப்படி யாருக்கும் பயனற்றுக் கிடப்பதை விடவும் எல்லா சமூகங்களைச் சேர்ந்த மக்களும் பயன்பெறும் வகையில் அது பகிர்ந்தளிக்கப்பட்டால் கூடப் பரவாயில்லை என்று இப்போது பெரும்பாலானோர் கருதுகின்றனர். இருப்பினும், அது முஸ்லிம்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் என்பதால், ‘பெரிய பங்கு’ முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றே முஸ்லிம்கள் கோருகின்றனர்.

அது ஒருபுறம் இருக்க, இந்த வீட்டுத் திட்டத்தை போல நாட்டில் உள்ள அல்லது குறிப்பிட்ட பிராந்தியத்தில் காணப்படும் அரச காணிகளையும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஏன் அரசாங்கங்கள் பிரித்துக் கொடுக்க முன்வரவில்லை என்ற முக்கியமான ஒரு கேள்வியையும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்வைத்து வருகின்றனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு சில மாதங்களின் பின்னர் அப்போது வீடமைப்பு அமைச்சராக இருந்த பேரியல் அஷ்ரப் சவூதி அரேபியாவுக்கு சென்றிருந்த போது அவருக்கு இளவரசரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வேளையில், தான் கொண்டு சென்றிருந்த சிறியதொரு வீடியோவை அவர் போட்டுக் காண்பித்தார். சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளைக் கொண்ட அதனைப் பார்த்த இளவரசர் கண்கலங்கிப் போனாராம்.

அப்போதுதான் பேரியல் அஷ்ரப் அந்த வேண்டுகோளை முன்வைத்தார். ‘வீடியோவில் நீங்கள் பார்த்த இம்மக்கள் வீடற்று இருக்கின்றனர். அவர்களுக்கு வீடுகளை அமைத்துத்தர முன்வர வேண்டும்’ என்று அவர் கோரி நின்றார். இதற்கு உடனடியாக இணக்கம் தெரிவித்த இளவரசர் அப்போது இந்தோனேசியாவில் நடைமுறைப்படுத்துவதற்கென தயார்நிலையில் இருந்த வீடமைப்புத் திட்டம் ஒன்றை இடைநிறுத்திவிட்டு, அந்த நன்கொடையை இலங்கைக்கு வழங்க முன்வந்தார்.

இதற்கென பல இடங்கள் பரிசீலிக்கப்பட்டு, கடைசியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டதும் ஆலிம்நகர் கிராமத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதுமான நுரைச்சோலையில் 64 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் காணப்பட்டது.

இது விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்ட அமைச்சர் பேரியல், சவூதிக் குழுவை இலங்கைக்கு அழைத்து வந்தார். நுரைச்சோலைக் காணியில் 500 வீடுகள் உள்ளடங்கலாக அனைத்து வசதிகளையும் கொண்ட மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2006 மே மாதம் 2ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

ஆனால், அந்த தருணத்தில்தான் இனவாதம் தூண்டிவிடப்பட்டது. தீகவாபி எனும் சிங்கள குடியேற்றக் கிராமத்திற்கு மிக அருகில் முஸ்லிம் குடியேற்றம் மேற்கொள்ளப்படுமானால் சிங்களவர்களுக்கு அது பாதகமாக அமையும் என்றனர். அதுமட்டுமன்றி, தீகவாபி புனிதபூமிக்கு அண்மித்ததாக இது அமைவதற்கு இடமளிக்க முடியாது எனவும் கோஷமிட்டனர்.

வீடமைப்பு திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஆரம்பமாகிய போது தீகவாபி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த ஒரு குழுவினர் விழா இடம்பெற்ற வளாகத்திற்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டனர்.

‘சிங்கள மக்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதாக’ சவூதி அரசின் பிரதிநிதி அங்கு கூறியதைக் கூட செவி மடுக்காமல், அந்நாட்டு கொடியை சின்னாபின்னமாக்கியும் கூட்டத்தை குழப்பியும் அவ்வளாகத்தை களேபரமாக்கினர்.

இதற்குப் பின்னால் இனவாத சக்திகள் மட்டுமன்றி பல சிங்கள பிரதேச அரசியல்வாதிகள் இருந்தனர். ஓரிரு முஸ்லிம் அரசியல்வாதிகளும் பேரியல் அஷ்ரபுக்கு எதிரான அரசியலொன்றை இதில் செய்ததாக அக்காலத்தில் பேசப்பட்டதுண்டு.

இதன் விளைவாக இந்த வீட்டுத் திட்ட நிர்மாணப்பணிகள் முடிவடைந்த பிறகு கூட அவ்விடத்திற்கு வந்து நாட்டின் ஜனாதிபதியால் கூட வீடுகளை திறந்து வைக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக, 2011ஆம் ஆண்டு அலரி மாளிகையில் வைத்து சவூதி அரசாங்கத்தினால் இவ்வீடுகள் மஹிந்த அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதே வரலாறு.

நாட்டின் தேசிய இன விகிதாசாரத்தின்படி, வீடுகள் கையளிக்கப்பட வேண்டும் என சிங்கள இனவாத சக்திகளால் தொடரப்பட்ட வழக்கின் மீது, 2009இல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இருப்பினும். முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கு அமைவாக சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக இஸ்லாமிய நாடொன்றினால் வழங்கப்பட்ட வீடுகளை, சுனாமியால் பாதிப்படையாத சிங்கள மக்களுக்கு கணிசமான அளவில் வழங்குவது தர்மமல்ல என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர்.

அன்று தொடக்கம் இன்று வரை மஹிந்த, மைத்திரி, கோட்டபாய, ரணில் அரசாங்கங்களில் முஸ்லிம் அரசியல்வாதிகள், தலைவர்கள் தேனிலவு கொண்டாடிய போதிலும் இந்த நுரைச்சோலை வீடுகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியவில்லை. நல்லிணக்கம் பேசும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இதனை செய்யவில்லை.

500 வீடுகளை மட்டுமன்றி, பாடசாலை, பஸ்தரிப்பு நிலையம், பள்ளிவாசல், சந்தை என எல்லாவற்றையும் உள்ளடக்கிய இந்த மாதிரிக் கிராமம் காடாகிக் கிடந்தது. கொரோனா காலத்தில் இடைத்தங்கல் முகாமாகவும் பின்னர் சில காலம் படையினரின் வசமும் இது இருந்த போதும், இப்போது மீண்டும் காடாகத் தொடங்கியிருக்கின்றது.

> **யாருக்கும் பயன்படாமல் இவை வீணாகிப் போவதை விட, முஸ்லிம்களுக்கு பெருமளவான வீடுகளும் ஏனைய சமூகங்களுக்கு ஏனைய வீடுகளும் என்ற அடிப்படையில் இவற்றை பகிர்ந்தளிக் தோழழர்களின் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்**

நிலைமை இவ்வாறிருக்க, இந்த வீடுகளை தேசிய இன விகிதாசாரத்தின்படி அல்லாமல், அம்மாறை மாவட்ட விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்;தளிப்பது நல்லது என்ற தீர்மானம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சில காலத்திற்கு முன்னர் எடுக்கப்பட்டது.

இருப்பினும், ஏன் இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்று காதர் மஸ்தான் எம்.பி. கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தீர்மானத்தின் படி முஸ்லிம்களுக்கு 270 வீடுகளும் சிங்களவர்களுக்கு 174 வீடுகளும் தமிழர்களுக்கு 87 வீடுகளும் வழங்க முன்மொழியப்பட்டிருந்ததாகவும், ஆனால், உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமையவே செயற்பட வேண்டும் என சட்ட மா அதிபர் திணைக்களம் கூறியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் குழு ஒன்றை அமைத்து நீதிமன்ற தீர்ப்புக்கு முரண்படாத வகையிலும், நியாயமான அடிப்படையிலும் இவ் வீடுகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக ஹரிணி அமரசூரிய கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் பல ஜனாதிபதிகளும், பிரதமர்களும், அமைச்சர்களும் இதே விதமான வாக்குறுதிகளையே வழங்கியிருந்தமை இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

இந்த வீடுகள் முழுமையாக முஸ்லிம்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது என்பதால், அவர்களுக்கு வழங்கப்படுவதே தார்மீகமாகும். ஆனால், நீதிமன்ற உத்தரவையும் மதிக்க வேண்டியுள்ளது. எனவே, யாருக்கும் பயன்படாமல் இவை வீணாகிப் போவதை விட, முஸ்லிம்களுக்கு பெருமளவான வீடுகளும் ஏனைய சமூகங்களுக்கு ஏனைய வீடுகளும் என்ற அடிப்படையில் இவற்றை பகிர்ந்தளிக் தோழழர்களின் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கடிதங்கள்

### மீராவோடை வடிகான்களின் அவல நிலை

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மீராவோடை பொதுச் சந்தை பகுதியில் காணப்படும் வடிகான்கள் அடைபட்டிருப்பதாலும், சுத்தப்படுத்தப்படாமல் இருப்பதாலும், அவை மோசமான நிலையில் உள்ளன.

இந்த வடிகான்களில் சேரும் குப்பைகளும், கழிவுகளும் அடைப்பை ஏற்படுத்தி, நீரோட்டத்தை தடுத்துள்ளது.

இதனால், தேங்கி நிற்கும் நீர் துர்நாற்றம் வீசுவதோடு, கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரக் கேடுகளையும் ஏற்படுத்துகின்றன.

அத்தோடு, வடிகான்களுக்கு மூடிகள் போடப்படாமல் இருப்பதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிச் செல்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனமெடுத்து இதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

– எச்.எம்.எம்.பர்ஸான்




உலக இளைஞர் தினம் (ஆவணி-12)

# இன்றைய உலகத்தை மாற்றும் இளைஞர்களின் பங்கு



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை மாணவன் ,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கான சக்தி, கனவுகளால் மட்டுமல்ல அந்தக் கனவுகளை செயலாக்கும் இளைஞர்களால் தான் அமைகிறது. உலக அளவில் இளைஞர்களின் சமூக, பொருளாதார, அரசியல் பங்களிப்பை முன்னிறுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆவணி-12 அன்று உலக இளைஞர் தினம் (International Youth Day) August 12 கொண்டாடப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையால் 1999ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

உலக இளைஞர்களின் எதிர்பார்ப்பு, சவால்கள், சமூக பங்களிப்பு போன்றவற்றைப் பொதுவாக உலகம் அறியச் செய்தல் தான் இதன் முக்கிய நோக்கம். மேலும், இளைஞர்கள் எதிர்நோக்கும் வேலைவாய்ப்பு குறைபாடு, கல்வி வாய்ப்புகள், பாலின சமத்துவம், மன அழுத்தம், அரசியல் புறக்கணிப்பு போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இத்தினம் நோக்கப்படுகிறது.

உலகளவில் சுமார் 1.8 பில்லியன் இளைஞர்கள் உள்ளனர் (வயது 10-24).

அவர்களில் பெரும்பாலானோர் வளர்ந்து வரும் நாடுகளில் வாழ்கிறார்கள்.

UNESCO மற்றும் ILO அறிக்கைகள் இளைஞர்கள் அதிகரித்த வேலைவாய்ப்பு துறைகளில் திறன் மற்றும் பயிற்சி தேவை என வலியுறுத்துகிறது.

## இளைஞர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்

### வேலைவாய்ப்பு பற்றாக்குறை

ILO (International Labour Organization) 2024 அறிக்கை படி, உலகளவில் இளைஞர் வேலைவாய்ப்பு இல்லாதவர்களின் வீதம் 13%ஆகும். அதே சமயம், வேலைக்காக தற்காலிக வேலைகள் (Gig Economy) மற்றும் தற்செயல் வேலைகள் (Informal Jobs) அதிகரித்து வருவதால், இளைஞர்களுக்கு பங்கு பெறும் தொழில் துறை நிலை தடுமாறுகிறது.

உதாரணமாக, Covid-19 பின்விளைவாக பல இடங்களில் இளைஞர் வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டது; இந்தியாவில் மட்டும் 2022ஆம் ஆண்டில் இளைஞர் வேலைவாய்ப்பு 5% குறைந்தது.

### டிஜிட்டல் வேறுபாடு (Digital Divide):

2023ஆம் ஆண்டில் World Economic Forum வழங்கிய தகவல், கிராமப்புற 40% இளைஞர்கள் ஆன்லைன் கல்வி மற்றும் தொழில்நுட்ப வசதிகளுக்கு அணுகல் இல்லாத நிலைமை உள்ளது என்று காட்டுகிறது.

இலங்கையில் Digital Divideக்கான அரசு திட்டம் 2023இல் ஆரம்பிக்கப்பட்டது, ஆனால், இன்னும் பெரும்பான்மையினர் சமூக வலயங்களில் உட்பட வாய்ப்பு குறைவு காட்டுகின்றனர்.

### மனநலப் பிரச்சினைகள்

உலகளாவிய மனநலம் ஆய்வுகள் ( WHO, 2023) படி, இளம் வயதுக்குட்பட்டவர்களில் (15-24 வயது இளைஞர்களின் 25% மன அழுத்தம் மற்றும் மன ஆரோக்கிய குறைபாடுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. தற்கொலையில் இளைஞர்களே அதிகம் ஈடுபடுகின்றனர்.

### அரசியல் புறக்கணிப்பு

2024ஆம் ஆண்டில் நடைபெற்ற பல உலகப் பொருளாதார மாநாடுகளில் இளைஞர்களின் அரசியல் பங்கு குறைவு மற்றும் அவர்களின் கருத்துக்கள் புறக்கணிப்பு எனும் சவால்களை விவாதித்துள்ளனர்.

இலங்கையில் இளைஞர்கள் அரசியல் முடிவுகளுக்கு அதிக பங்களிப்பு கொடுக்க விரும்புகின்றனர். ஆனால், இடைநிலை வழிகாட்டல்கள் குறைவு மற்றும் அரசியல் சூழல் காரணமாக சவால்களை சந்திக்கின்றனர்.

## இளைஞர்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக

### சுற்றுச்சூழல் பாதுகாப்பு

Greta Thunberg போன்ற இளைஞர் சூழலியல் செயற்பாட்டாளர்கள் உலகளாவிய பருவநிலை மாற்றத்தை தடுக்க போராடி வருகிறார்கள்.

2023இல் Srilanka Youth Climate Action Network என்பது ஒருங்கிணைத்து கொண்டிருக்கும் பிளாஸ்டிக் தடுப்பு இயக்கம் நாட்டில் பல இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

### மனநலம் மற்றும் விழிப்புணர்வு

2023-ல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட 'Youth Mental Health Initiative' மூலம் இளைஞர்களுக்கு ஆன்லைன் ஆலோசனை மற்றும் குழு சிகிச்சை வழங்கப்படுகிறது.

உலகளவில், 'Mental Health Awareness' என்ற சமூக ஊடக இயக்கம் 2024ஆம் ஆண்டிலும் அதிகம் வளர்ந்து, இளைஞர்களின் மனநலத்தை மேம்படுத்த உதவுகிறது.

### சமூக ஊடகங்கள் வழியாக மாற்றம்

2024இல் Facebook, Youtube ஆகியவற்றில் சமூக நீதி, கல்வி, அரசியல் விழிப்புணர்வு போன்ற விடயங்களைப் பற்றி பல இளைஞர்கள் ஒடியோ-வீடியோ வடிவில் செய்தி பரப்பி வருகிறார்கள்.

இலங்கையில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி கல்வி ஆதரவு இயக்கங்கள் 2023இல் அதிகரித்துள்ளன.

### தன்னார்வ இயக்கங்கள்

Red Cross Youth Sri Lanka கடந்த வருடம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தது.

2024இல் NSS (National Service Scheme ) இளைஞர்கள் நாட்டில் பல சமூக சேவை திட்டங்களை நடத்தி வருகின்றனர்.

### இலங்கை இளைஞர்களின் சமகால முன்னேற்றங்கள்

இலங்கை இளைஞர்களின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்த 'Skill For Future' என்ற திட்டம் 2023இல் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பல இளைஞர்கள் தொழில்நுட்ப, தொழில் முனைவோர் திறன்களை கற்றுக் கொண்டுள்ளனர்.Startup துறையில் இலங்கை இளைஞர்கள் 2024இல் மிக சிறந்த முன்னேற்றங்களைச் செய்துள்ளனர். புது தொழில்நுட்பம் கொண்டு வரும் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன. இலங்கை இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் விவசாயத் தொழில்கள் சுற்றுச்சூழல் சிந்தனையுடன் இணைந்து வளர்கின்றன.

சமூக மற்றும் கலாசார விழாக்களில் இளைஞர்கள் முக்கிய பங்காற்றி, நாட்டின் ஒற்றுமையை ஊக்குவிக்கின்றனர்.

### "இளைஞர்களே எதிர்காலத்தின் தூண்கள்"

உலகம் இன்று எதிர்கொள்ளும் பருவநிலை மாற்றம், அமைதியின் இழப்பு, வேளாண்மை நெருக்கடி, வேலைவாய்ப்பு பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை உருவாக்குபவர்கள் இளைஞர்களே. அவர்களுக்கான உற்சாகம், வழிகாட்டுதல் மற்றும் தகுந்த இடம் வழங்கப்பட்டால், உலகம் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கி பயணிக்கும்.

அதனால் தான், உலக இளைஞர் தினம் என்பது ஒரு விழிப்புணர்வு நாள் மட்டுமல்ல அது ஒரு இயக்கம், நம் எதிர்காலத்தை வடிவமைக்கும் இயக்கம்.




# சர்வதேச விவகாரங்களில் நீதி காக்கும் SCO அமைப்பு

சிவபிரகாசம் ரேனுகா

> இந்த ஆண்டு தொடக்கத்தில், சீன ஜனாதிபதி ஸிஜின்பிங், இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் சந்தித்து, சீனா-இலங்கை உறவுகளை மூலோபாய பார்வையில் அணுகி, "பொது எதிர்காலத்தை பகிரும் சமூகத்தை" இணைந்து கட்டியெழுப்ப வேண்டும் என வலியுறுத்தினார்

ஒகஸ்ட் 31 முதல் செப்டெம்பர் 1 வரை, சீனா தியான்ஜினில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உச்சி மாநாடு உலகளாவிய கவனத்தை ஈர்க்கவுள்ளதாக இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தெரிவித்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பிரகாசமான எதிர்காலத்தை ஆராய்வதற்கான ஊடக கரந்துரையாடல் ஒன்று சீன தூதரகத்தில் வியாழக்கிழமை(07) அன்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், ஒகஸ்ட் 31 முதல் செப்டெம்பர் 1 வரை நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், மற்றும் 10 சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 24 ஆண்டுகளுக்கு முன்பு, சமாதானம் மற்றும் வளர்ச்சி நோக்கி உலகப் போக்கையும், பிராந்திய மக்களின் நிலைத் தன்மை, வளம் மற்றும் ஆழமான பரிமாற்றம், ஒத்துழைப்பிற்கான ஆவலையும் கருத்தில் கொண்டு, சீனா, ரஷ்யா மற்றும் மேலும் நான்கு நாடுகள் இணைந்து ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்கும் என்ற வரலாற்று முடிவை எடுத்தன.

2009இல் இலங்கை உரையாடல் கூட்டாளராக இணைந்தது. இன்று SCOவில் சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகள், 2 பார்வையாளர் நாடுகள், 14 உரையாடல் கூட்டாளர்கள் உள்ளனர்.

இவை உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதியையும், யூரேஷிய கண்டத்தின் 60% பரப்பையும் உள்ளடக்கியவை. 2024ஆம் ஆண்டில், சீனா மற்றும் SCO உறுப்பு நாடுகள், பார்வையாளர் நாடுகள் மற்றும் உரையாடல் கூட்டாளர்கள் இடையிலான வர்த்தகம் 890 பில்லியன் அமெரிக்க டொலர் எனும் சாதனை அளவை எட்டியது. இது SCO அமைப்பின் வலுவான உயிர்ப்பு சக்தியையும், பிரகாசமான எதிர்காலத்தையும் வெளிப்படுத்துகிறது.

SCO, பிராந்தியத்திலும் அதன் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் சமாதானம் மற்றும் வளர்ச்சியை பேணுவதில் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

SCO-வில் தொடர்ந்து வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர நன்மை, சமத்துவம், ஆலோசனை, பல்வேறு நாகரிகங்களை மதித்தல், மற்றும் பொதுவான முன்னேற்றத்தை நோக்கிய முயற்சி ஆகியவற்றைக் கொண்ட முன்னேற்றத்தால் ஏற்பட்டது.

இவை இன்று சர்வதேச ஒத்துழைப்பில் மிகவும் அரிதான மதிப்புகள் எனலாம். தற்போதைய குழப்பமான சர்வதேச சூழ்நிலையில், பல்தரப்பு அமைப்புகளுக்கு எதிரான அழுத்தங்கள் அதிகரித்த போதிலும், SCO முக்கியமான சர்வதேச மற்றும் பிராந்திய பிரச்சினைகளில் நீதிகாக்கும் வகையில் குரல் கொடுத்துள்ளது, பல்தரப்பு வர்த்தகமுறையை உறுதியாக பாதுகாத்துள்ளது. மற்றும் வன்முறையின் தவறான பயன்பாட்டை கடுமையாக கண்டித்துள்ளது. நீதி மற்றும் நியாயத்தை ஆதரிக்கும் இந்தவலுவான செய்திகளை சர்வதேச சமூகம் உயர்ந்த பாராட்டுகளுடன் அங்கீகரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலையில் சீனா ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாறும் தலைமைப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, "ஷாங்காய்ஆவியை நிலைநிறுத்துதல்: SCO முன்னேறும்" என்ற கோஷத்தை பின்பற்றி செயல்பட்டுள்ளது. சீன ஜனாதிபதி ஸி ஜின் பிங் முன் வைத்த, ஒற்றுமை மற்றும் பரஸ்பர நம்பிக்கையுடன் கூடிய, அமைதி மற்றும் சாந்தியுடன் கூடிய, வளம் மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும், அண்டை நட்பை வளர்க்கும், மற்றும் நியாயம் மற்றும் நீதியை நிலைநிறுத்தும் 'பொது இல்லம்' என்ற நோக்குடன், சீனா அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் வர்த்தகம், ஆற்றல், பசுமை தொழில், டிஜிட்டல் பொருளாதாரம், மக்கள் பரிமாற்றம் போன்ற துறைகளில் 100க்கும் மேற்பட்ட நிகழ்வுகளை நடத்தியுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கையாள விரிவான மையம், தகவல் பாதுகாப்பு மையம், பன்னாட்டு குற்றங்களை எதிர்க்கும் மையம், மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு மையம் ஆகியவற்றை நிறுவும் ஆலோசனைகளை வேகமாக முன்னெடுத்துள்ளது. சட்ட அமுலாக்கம் மற்றும் பாதுகாப்புதுறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி, புதிய பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு மாதிரியை உருவாக்கியுள்ளது. இம்முயற்சிகள் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு குடும்ப உறுப்பினர்களால் உயர்ந்த மதிப்பீடு பெற்றுள்ளன.

அரசியல் தடைகள் அல்லது அழுத்தங்கள் இன்றி, SCO உண்மையான சமத்துவம், பரஸ்பர நன்மை மற்றும் நிலையான ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது. உலக தெற்கின் முக்கிய உறுப்பினர்களான சீனாவும் இலங்கையும், நெருங்கிய ஒருங்கிணைப்பை பேணி, உலக தெற்கின் ஒற்றுமை மற்றும் புதுப்பிப்பை முன்னேற்றி வருகின்றன. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கீழ் இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்புகளில் இலங்கை தீவிரமாக பங்கேற்று, பல்வேறு நன்மைகளை பெற்றுள்ளது. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வீதி வரைபடத்தில் தேசிய நாணயங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் நிபுணர் குழுமாநாடு, பசுமை வளர்ச்சி மன்றம், இராணுவ மருத்துவ கருத்தரங்கு, பாரம்பரிய மருத்துவ மன்றம், மற்றும் சுற்றுச்சூழல் ஆண்டுப் பேரவை உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் இலங்கை அரசியல்வாதிகள், நிபுணர்கள், சிந்தனைக்குழு உறுப்பினர்கள், மற்றும் ஊடக பிரதிநிதிகள் பங்கேற்று, தங்கள் அறிவும் பங்களிப்பும் வழங்கியுள்ளனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில், சீன ஜனாதிபதி ஸிஜின்பிங், இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் சந்தித்து, சீனா-இலங்கை உறவுகளை மூலோபாய பார்வையில் அணுகி, "பொது எதிர்காலத்தை பகிரும் சமூகத்தை" இணைந்து கட்டியெழுப்ப வேண்டும் என வலியுறுத்தினார். இது இருதரப்பு உறவுகளுக்கு பாதைவரையையும், மூலோபாய வழிகாட்டுதலையும் வழங்கியுள்ளது என்றார்.



இஸ்தான்புல்

துருக்கியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்:

# ஒருவர் மரணம்; 29 பேர் காயம்

## கட்டிடங்கள் தரைமட்டம்; மீட்புப் பணி தீவிரம்

வடமேற்கு துருக்கியில் உள்ள சிந்திர்கி என்ற பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் பொதுமக்கள் பீதி அடைந்தனர். இது ரிக்டர் அளவுகோலில் 6.1 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில், ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானதாகவும், 29 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குவியும் இஸ்மிர் ஆகிய நகரங்கள் உட்பட துருக்கியின் மேற்கில் உள்ள பல முக்கிய நகரங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தின் மையப்பகுதியாக இருந்த சிந்திர்கி நகரில் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட சிறிது நேரத்திலேயே 81 வயது பெண் ஒருவர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தால் பாலிகேசிர் மாகாணத்தில் உள்ள பல்வேறு கட்டிடங்கள் இடிந்து விழுந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான புகைப்படங்களும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. நாட்டில் உள்ள அனைத்து மீட்புக் குழுக்களும் உடனடியாக முடுக்கிவிடப்பட்டுள்ளதாக துருக்கி உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா தெரிவித்துள்ளார். மொத்தம் 16 கட்டிடங்கள் தரைமட்டமானதாகவும், 29 பேர் காயமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.



கடந்த 2023ஆம் ஆண்டு துருக்கி நாட்டில் தென்மேற்கு பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சுமார் 53,000 பேர் உயிரிழந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

மியாமி

### ஜனாதிபதி கைதுக்கு உதவினால் பெருந்தொகை பரிசு



வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை கைது செய்வதற்கு உதவுவோருக்கு, 50 மில்லியன் அமெரிக்க டொலர் (இலங்கை ரூபாவில் சுமார் 160 கோடி) பரிசுத் தொகை வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில், மூன்றாவது முறையாக நிக்கோலஸ் மதுரோ ஜனாதிபதியாக உள்ளார். இவர், உலகின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவராக செயல்படுவதாகவும், போதைப்பொருள் கும்பல்களுடன் இணைந்து அமெரிக்காவிற்குள் போதைப் பொருட்களை சப்ளை செய்வதாகவும், கடந்த 2020இல் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவருக்கு எதிராக மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அப்போது, நிக்கோலஸ் மதுரோவை கைது செய்ய உதவுவோருக்கு, 25 மில்லியன் டொலர் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. பின்னர், அமெரிக்காவின் முன்னள் ஜோ பைடன் அரசு அந்தத் தொகையை 25 மில்லியன் டொலராக உயர்த்தியது. இந்நிலையில், தற்போது மதுரோவை கைது செய்வதற்கான பரிசுத் தொகையை, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், 50 மில்லியன் டொலராக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க்

உ க்ரைன் போர் நிறுத்தம்:

### ஆக.15 ட்ரம்ப் – புட்டின் சந்திப்பு



அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் - ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எதிர்வரும் 15ஆம்தி சந்திக்க உள்ளனர்.

இதன்போது, ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பான அமைதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என்றும் 'வால் ஸ்டிரீட் ஜர்னல்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ட்ரம்ப் கூறும்போது, "எந்தவொரு சமாதான ஒப்பந்தமும் பிரதேச மாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். ஆனால், சில பகுதிகளை நாங்கள் திரும்ப பெறுவோம். சில பகுதிகள் மாறலாம். அது இரு தரப்புக்கும் நன்மை தருவதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரை புட்டின் அமைதியை விரும்புவதாக நம்புகிறேன்" என்று தெரிவித்தார். 'புட்டினை சந்திக்க மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன். அலாஸ்காவில் இந்த சந்திப்பு 15ஆம் திகதி நடைபெறும்' என்று சமூக வலைத்தளத்திலும் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார்.

நேட்டோவுடன் இணைந்து செயல்பட்டதால், உக்ரைன் மீது கடந்த 2022இல் போரை தொடங்கினார் புட்டின். அமைதியை ஏற்படுத்த பல நாடுகள் எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

புதுடெல்லி

சுதந்திர தின விழாவில்

### சிறப்பு விருந்தினர்களாக தூய்மை பணியாளர்கள்

செங்கோட்டையில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய சுதந்திர தின விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக ஐம்பது தூய்மைப் பணியாளர்களை அழைத்து கௌரவிப்பதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த ஐந்து தூய்மைப் பணியாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்களின் பெயர்களுடன் பாதுகாப்பு அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ள தெரிவு செய்யப்படும் தொழிலாளர்களை தங்கள் மண்டலங்களில் தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பேணுவதில் அவர்களின் செயல்திறன் மற்றும் பங்களிப்பின் அடிப்படையில் தெரிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தூய்மைப் பணியாளர்களின் இறுதிப் பட்டியலை சேகரித்து தொகுப்பதற்கான பொறுப்பு டெல்லி சுற்றுச்சூழல் மேலாண்மை சேவைகளுக்கு (DEMS) வழங்கப்பட்டுள்ளது.

"மாநகராட்சி மன்றத்தின் சுற்றுச்சூழல் மேலாண்மை சேவைகள் துறை (DEMS), ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் ஐந்து துப்புரவுத் தொழிலாளர்கள், மூன்று பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை துணைவர்களின் பெயர்களைக் கேட்டுள்ளது" என்று உத்தரவில் கூறப்பட்டுள்ளது. அதேபோல சுகாதார ஆய்வாளர் பதவிக்கு குறையாத ஒரு துப்புரவுப் பிரிவு அதிகாரியை குழுவுடன் சேர்த்து பரிந்துரைக்கவும் மாநகராட்சி மண்டலங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.






சென்னை

### எம்.பிக்கள் சென்ற விமானம் அவசர தரையிறக்கம்

#### பெரும் விபத்து தவிர்ப்பு

திருவனந்தபுரத்தில் இருந்து கேரள எம்.பிக்கள் சென்ற எயார் இந்தியா விமானத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, சென்னை விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி காங்கிரஸ் எம்.பி. ராபர் ப்ரூஸ், கேரள எம்.பிக்கள் கேசி வேணுகோபால், கொடிக்குனில் சுரேஷ், அதுார் பிரகாஷ், கே.ராதாகிருஷ்ணன் ஆகியோர் திருவனந்தபுரத்தில் இருந்து எயார் இந்தியா விமானத்தின் மூலம் டில்லி புறப்பட்டுள்ளனர். அப்போது, விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கடுமையான காற்றழுத்தம் ஏற்பட்டுள்ளது. இதனால், விமானத்தை சென்னைக்கு திருப்புவதாக விமானி அறிவித்துள்ளார்.

சுமார் 2 மணிநேரம் வானில் வட்டமடித்த நிலையில், விமானம் தரையிறக்க அனுமதி கேட்கப்பட்டுள்ளது. விமானத்தை தரையிறக்க முயன்ற போது, அதே ஓடுபாதையில் மற்றொரு விமானம் இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிறகு, சாமர்த்தியமாக செயல்பட்ட விமானி, விமானத்தை மீண்டும் மேலே எழுப்பி, பிறகு 2ஆவது முயற்சியில் பாதுகாப்பாக தரையிறக்கியுள்ளார். இதனால், விமானத்தில் இருந்த எம்பிக்கள் உள்ளிட்ட பயணிகள் பீதியடைந்துள்ளனர்.

இது குறித்து காங்கிரஸ் எம்.பி. கேசி. வேணுகோபால் வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில், 'பயங்கரமான அனுபவம். விமானியின் தைரியமான முடிவு பலரின் உயிரைக் காப்பாற்றியது,' என குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளிடம் தோற்ற பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் தோற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றிருந்த நிலையில், ட்ரினிடாட்டில் ஞாயிற்றுக்கிழமை (10) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் ஷே ஹோப் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஜேடன் சியல்ஸ் (3), ஜெடியாஹ் பிளேட்ஸ், குடகேஷ் மோட்டி, றொஸ்டன் சேஸ், ஷாமர் ஜோசப்பிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்த வண்ணமிருந்து மூன்று தடவைகள் மழை குறுக்கிட்டு 37 ஓவர்களுடன் இனிங்ஸ் முடிவுக்கு வந்த நிலையில் 7 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. ஹஸன் நவாஸ் ஆட்டமிழக்காமல் 36 (30), ஹுஸைன் தலாட் 31 (32) ஓட்டங்களைப் பெற்றனர்.



பதிலுக்கு டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ன் முறைப்படி 35 ஓவர்களில் 181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் ஆரம்பத்திலேயே ஹஸன் அலியின் அடுத்தடுத்த ஓவர்களில் பிரெண்டன் கிங், எவின் லூயிஸைப் பறிகொடுத்தது. சிறிது நேரத்தில் பின்னர் கேசி காட்டியையும் அப்ரார் அஹ்மட்டிடம் இழந்தது.

இந்நிலையில் ஹோப்பும், ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் இணைப்பாட்டத்தில் வெற்றியிலக்கை நோக்கி மேற்கிந்தியத் தீவுகள் நகர்ந்த நிலையில், ஹோப் 32 (35) ஓட்டங்களுடனும் ருதஃபோர்ட் 45 (33) ஓட்டங்களுடனும் மொஹமட் நவாஸின் அடுத்தடுத்த ஓவர்களில் வீழ்ந்தனர்.

எனினும் தொடர்ந்து வந்த சேஸின் ஆட்டமிழக்காத 49 (47), ஜஸ்டின் கிரேவ்ஸின் ஆட்டமிழக்காத 26 (31) ஓட்டங்களோடு 33.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை மேற்கிந்தியத் தீவுகள் அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சேஸ் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்கிடையிலான தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.







அறுகம்பே அரை மரதன்:

### ரத்நாயக்க, அலக்சாண்டா பேகே வென்றனர்

நியாஸ் ஆதம், ஏ.எல்.எம்.சினாஸ்

அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியில், ஆண்களில் இலங்கையைச் சேர்ந்த ரீ.டபள்யூ. ரத்நாயக்கவும், பெண்களில் சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த அலக்சான்டா பேகேயும் முதலிடம் பெற்றனர்.

ஆண்களில் இலங்கையைச் சேர்ந்த கலன விஜயவிக்ரம இரண்டாமிடத்தையும், ஜேர்மனியைச் சேர்ந்த மெதிஸ் அடம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களில் நெதர்லாந்தைச் சேர்ந்த லியோனி இரண்டாமிடத்தையும், சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த எலினா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடாத்திய இப்போட்டி பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) அன்று நடைபெற்ற நிலையில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என சுமார் 350 பேர் கலந்துகொண்டு 10 கிலோ மீற்றர் மற்றும் 5 கிலோ மீற்றர் என்ற பிரிவுகளாக இடம்பெற்றது.



10 கிலோ மீற்றரில் ஆண்களளில் இலங்கையைச் சேர்ந்த ரீ.டபள்யூ. எரந்த தென்னகோனும் பெண்களில் ஐக்கிய இராச்சியத்தின் சேர்ந்த நிகோல் ரெட்லீயும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

எப்.ஏ கொமியுனிட்டி ஷீல்ட்:

### பலஸிடம் மண்கவ்விய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க கொமியுனிட்டி ஷீல்ட் போட்டியில், நடப்பு எஃப்.ஏ கிண்ண சம்பியன்களான கிறிஸ்டல் பலஸுடனான போட்டியில் நடப்பு பிறீமியர் லீக் சம்பியன்களான லிவர்பூல் தோற்றது.


வெம்ப்ளியில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற இப்போட்டியானது வழமையான நேரத்தில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையில், பெனால்டியிலேயே 3-2 என்ற ரீதியில் பலஸ் வென்றது.

லிவர்பூல் சார்பாக ஹுகோ எகிடிகே, ஜெரெமி பிறிம்பொங்க் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, பலஸ் சார்பாக ஜீன்-பிலிப்பே மடெடா, இஸ்மைலா சார் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பெனால்டியில் லிவர்பூலின் மொஹமட் சாலா, தனதுதையை கோல் கம்பத்துக்கு மேலால் செலுத்தியதுடன், அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர், ஹார்வி எலியொட்டின் உதைகளை பலஸின் கோல் காப்பாளர் டீன் ஹென்டர்சன் தடுத்திருந்தார்.



### மிலனை வீழ்த்திய செல்சி



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனுடன் தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற சிநேகபூர்வ போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி வென்றது.

செல்சி சார்பாக லியம் டெலப் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, ஜோவா பெட்ரோ ஒரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை யூசுஃப் பொபனா பெற்றிருந்தார்.

இதேவேளை ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் இன்னொரு சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் வென்றது. ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் அன்ட்றீயா கம்பியாஸோ பெற்றதோடு, டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மக்ஸிமில்லியன் பெய்யர் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 12, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.